**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 9/2023

எ.ம.சா1 ராஜேஷ்

| | | |
|---|---|---|
| Name | : | ராஜேஷ் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 28.01.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. டி.என். 76.AQ 3880 என்ற பதிவு எண் கொண்ட Hero HOnda Splendor வாகனத்தின் காப்பீடு நகல் எ.ம.சா.ஆ 1

2. குற்ற வழக்கின் வரைபடம் மற்றும் குற்றஇறுதியறிக்கை நகல் எ.ம.சா.ஆ 2

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் ஈடுபட்ட டி.என். 76.AQ 3880 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காப்பீடானது 5 வருடங்களுக்கு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் வருடத்திற்கு மட்டும் தனி நபர் காப்பீடும் மற்றும் வருடங்களுக்கு தனி நபர் காப்பீடு கொடுக்கப்படவில்லை என்பதற்கு ஏதேனும் தனிபட்ட காரணம்

உள்ளதா என்றால் காப்பீடு பெறும் நபரை பொறுத்தது. காப்பீடு செய்யும் நபர்களின் அறியாமையை பயன்படுத்தி எங்களது நிறுவனம் 5 வருடங்களுக்கு முழு காப்பீடு வழங்காமல் ஒருவருடத்திற்கு முழு காப்பீடு வழங்கிவிட்டு மீதமுள்ள 4 வருடத்திற்கு 3ம் நபர் காப்பீடு வழங்குவது எங்களது நிறுவனத்தின் உள்நோக்கம் கொண்டது என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு எங்களது நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. காவல்துறையினர் கு.வி.மு.ச 174ன் வழக்கு பதிவு செய்தது தவறு என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.